Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றுங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னுகம்: வெகுதானியஹூ மார்கழிமீ க௦உ (25-12-38) { இல. 11

கல்வி - 36

(தமிழாசிரியர், திரு. கா. இளையதம்பி அவர்கள்)

மனித வாழ்க்கைக் கனுகூலமானவும் பிரதிகூலமானவுமான சில பூச்சிகளைப் பற்றிக் கவனித்தோம். இவ்விதழிலே வாழ்க்கைக் கனுகூலமான தேனீக்களைப் பற்றிச் சில கூறுதும்.

இராச்சிய பரிபாலனத்துக்கு வேண்டுவன யாவும் தேன் கூடுகளிலே காணப்படும் தொழிலாளர், மெய்காப்பாளர், உணவு சம்பாதிப்போர், வாயில் காப்போர், போர்வீரர் தோட்டிகள் முதலான பகுப்பாளரெல்லாம் ஒரு தேன் கூட்டிலேயுண்டு. தேன் கூட்டுக்குத் தலைமை வகித்து அரசு புரிவதும், வமிசவிருத்தி பண்ணுவதும் ஒரு பெண்ணீயேயாம். இப் பெண்ணீ மற்ற ஈக்களைக் காட்டிலும் நீண்டதேகமும் நிறமுமுடையதாய் அழகு பெற்றதாயிருக்கும். அதைச் சூழ்ந்து தேகக் காப்புக்கும் தொண்டுக்குமாக அனேக ஈக்களிருக்கும். இந்த ஈ இரைதேடி வெளியே செல்வதில்லை. இரை சம்பாதிக்கும் ஈக்கள் இரையை அதன் வாய்க்குட் செலுத்தும், தாய்த்தேனீயெனப்படுமிவ்விராணி ஈ தன் சீவியத்திலொருமுறை தன் ஆணீயுடன் கூட்டுக்கு வெளியே கூடிக் குல விருத்தியின் பொருட்டுப் பல்லாயிரக்கணக்கான முட்டைகளையிடும். அம்முட்டைகளும் வமிசவிருத்திக்கு வேண்டும். இராசகன்னிகைகள், தொழிலாளிகள், ஆண் ஈக்கள் முதலான பல்வகை யினங்களையும் பிறப்பித்துவிடும். இதனோடு கூடின ஆண் ஈ அன்றைக்கே தன்னுயிரைப் போக்கிவிடும்.

நாம் முன்கூறிய பல்வகை யினங்களும் கன்னிகைகளான பெண்ணீக்களேயாம். அவையே பல்வேறு தொழில்களையும் புரிந்து தேன் கூட்டின் விருத்திக்குதவியாயிருப்பன. தொழில் புரியும் ஈக்கள் கூட்டைவிட்டு வெளியே வெகுதூரத்துக்குச் சென்று பூக்களிலிருந்து மகரந்தப் பொடியையும் தேனையுஞ் சேர்த்துக் கொண்டு திரும்பிவரும். மகரந்தப்பொடி இரண்டு அவற்றின் பின் காலிரண்டிலும் ஒட்டிக் கொள்ளும். மது அவற்றின் வயிற்றிலிருக்கும் ஒரு பையில் நிறைந்து கொள்ளும். அவை திரும்பியுந் தாமிருந்து புறப்பட்ட கூட்டுக்கே நேரில் வந்து சேரும். பின்னொரு கூட்டுக்கு அவை செல்லும் வழக்கமில்லை. அப்படிச் செல்ல நேரிடின் வாயில் காக்கும் மற்றக் கூண்டினீக்கள் அவற்றையுட்செல்ல விடாது போர் புரியும். போர் பத்து நிமிஷம் வரையில் நடப்பதுமுண்டு. ஆதலின் ஈக்கள் கயிறடித்ததுபோலத் தஞ் சொந்தக் கூட்டிற்கே நேரேவந்து சேரும் வழக்கமுண்டென்க. அங் சேகரித்த தேனையுமிழ்ந்து தேனடையின் மேலறைகளை நிரப்பி மெழுகால் மூடிவிடும். தோட்டிவேலை செய்யும் ஈக்கள் பிணங்களையும் மலத்தையும் வெளியேற்றிவிடும். கன்னிகைகளான பல்லாயிரம் ஈக்களின் மத்தியில் வாசம் பண்ணும் ஆணீக்களுஞ்சில வுண்டு.

ஆணீக்கள் சாதுக்கள் போன்றன. அவற்றிற்குக் கொடுக்குமில்லை, விஷமுமில்லை. வேலை செய்யவுந் தெரியாது, போர்புரியவுந் தெரியாது. சும்மாவிருந்து தேனிற் கொஞ்சங் குடிப்பதும் சாயங்காலத்தில் வெளிப்போந்துலாவுவதுமே யவற்றின் பொழுதுபோக்கு. அவற்றிற்கு யாதொரு பொறுப்பும் அதிகாரமுமில்லை.

(தொடர்ச்சி 88-ம் பக்கம் பார்க்க)

அறியாமை ஈதென் றறிவித்த அன்றேதான், பிறியா அருள்நிலையும் பெற்றேன் பராபரமே.

இலக்கியம்

(பொ. கணபதிப்பிள்ளை ஆசிரியர். மட்டுவில் வடக்கு)

(முற்றொடர்)

பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே கந்தபுராணம் இயற்றப்பட்டது. இது கம்பராமாயணத்திற்கு முற்பட்ட முதற்பெருங் காப்பியமாகும். இது நவில் தொறும் நவில் தொறும் நூநயம் பயப்பது. பயில் தொறும் பயில் தொறும் அறுமுகக் கடவுள் திருவருட் பக்திஞானம் விளைப்பது. இதன் கண் காவியப்பண்ணங்களோடு சைவ சித்தாந்தக் கருத்துக்கள் தெள்ளிதில் விளக்கப்பட்டுள்ளன. இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் கம்பராமாயணம் எழுந்தது. இது முத்தமிழ்ச் சுவைகளும் பொருந்தி மக்களது நண்ணிய இயற்கை முழுவதையும் படமெடுத்துக் காட்டினாற்போற் காட்டவல்லதாய் நயங்கள் பலவும் நிறைந்த செந்தமிழ்ப் பெருங் காப்பியமாகும். இக்காலத்திற்றான் நளவெண்பா இயற்றப்பட்டது. இந்நூல் காப்பியச் சிறப்புக்களமைய சொற்பொருணயங்கள் செறியச் செய்யப்பட்டுள்ளது. இதன் நடைமிகத் தெளிவானது. இக்காலத்தேதான் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நீதி நூல்களும் அசதிக்கோவை முதலிய சிறு காப்பியங்களும் தோன்றின.

பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்திலே அறநெறிச் சாரம் எனும் நீதிநூலெழுந்தது. இது காட்சி, ஒழுக்கம், ஞானம் எனும் முப்பெரும் பிரிவினையுடைத்து.

பதினாலாம் நூற்றாணடின் தொடக்கத்திலே உமாபதி சிவாசாரியர் சிவப்பிரகாசம் எனும் சிவஞான போதச் சார்பு நூலையும், உண்மைநெறி விளக்கம், திருவருட் பயன், கோயிற் புராணம், சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராணசாரம், திருப்பதிகக் கோவை எனும் நூல்களையும் இயற்றினர்.

பதினைந்தாம் நூற்றாண்டிலே உலா, கலம்பகம் எனும் சிறு காப்பியங்கள் இயற்றப்பட்டன. இறையன்பின் பெரும்பயனாகத் திருப்புகழ்ப் பெருநூல் எழுந்தது. இது கடவுட் பேரன்பினை விளைப்பதுடன் இன்பச் சுவையையும் தன்னகத்துக் கொண்டுள்ளது. இக்காலத்தே வில்லிபாரதம்எழுந்தது.இது இனியவாக்கும்,நல்லசந்தமும் பயின்றுசெல்வதாற் பலராலும் பாராட்டப்படுவதாயிற்று.

பதினாறும் நூற்றாண்டிலே திகழ்ந்த பெருங்காப்பியம் சேதுபுராணம். இந்நூற்றாண்டில் தல புராணங்கள் பெருங்காப்பியங்களாகத் தொடங்கின. இறைவனைப் போற்றும் சிறுகாப்பியங்களுமெழுந்தன.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குமரகுருபர சுவாமிகளால் கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், பண்டார மும்மணிக்கோவை, காசிக்கலம்பகம் முதலிய பல நூல்கள் சொற்பொருணலங்கனிய இயற்றப்பட்டன. இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், இரகுவம்சம் எனும் காவியங்கள் எழுந்தன. இவற்றுள் இரகுவம்சம் அரியசொன்னடையுடையது.

பதினெட்டாம் நூற்றாண்டிலே சிவப்பிரகாச சுவாமிகளால் பிரபுலிங்கலீலை, நால்வர் நான்மணிமாலை, வெங்கைக் கோவை, நன்னெறி முதலிய பலநூல்களியற்றப் பெற்றன. இவற்றுள் பிரபுலிங்கலீலை சொல்லணி, பொருளணி நிரம்பிய ஓர் காவியரத்தினம். இந்நூற்றாண்டிலேயே சிவஞான முனிவர் பல் அரிய நூல்களியற்றினர். அவற்றுள் சோமேசர் முதுமொழி வெண்பா திருக்குறட் செய்யுள்கட்கு உதாரணம் தருவது. அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் கற்பனை நயம் செறிந்தது.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் முதற் பகுதியிலே முந்திய நூற்றாண்டிற் போலவே பல்வகைச் சிறு காப்பியங்கள் எழுந்தன. இக்காலத்தே பல அறிஞர்கள் பொதுமக்களுக்குதவுமாறு உரைநடை நூல்கள் செய்தனர். பெருங்காப்பியங்கள் முழுவதும் புராணவடிவாகவே எழுந்தன. கதைத் தலைவரொருவரைக் குறித்துப் பெருங்காப்பியம் பாடும் வழக்கமருகியது. தமிழிலக்கியங்களை ஐரோப்பிய பாதிரிமாருங் கற்றனர். இந்நூற்றாண்டிலே ஆறுமுகநாவலர் திருக்குறள் பரிமேலழகர் உரை, திருக்கோவையாருரை, கந்தபுராணம், சேதுபுராணம், பாரதம் முதலிய நூல்களை அச்சிற்பதிப்பித்தார். மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் பல பிள்ளைத் தமிழ்களியற்றினார். அவற்றுள் சேக்கிழார்பிள்ளைத்தமிழ் மிகவும் சிறந்தது. இவரியற்றிய புராணங்களுள் திருநாகைக் காரோணப்புராணம் பெரிதும் பயில்கின்றது. இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் திராவிடப்பிரகாசிகை எனும் உரைநடை இலக்கியம் சபாபதிநாவலரால் இயற்றப்பட்டது. இந்நூற்றாண்டிலேயே சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள், இறையனாரகப்பொருள் முதலிய இலக்கியநூல்கள் சிலவற்றை ஆராய்ச்சி மிக்க பதிப்புரைகளுடனே வெளியிட்டார்;

இவ்விருபதாம் நூற்றாண்டிலே உரைநடை நூல்களே மிகுதியாக இயற்றப்படுகின்றன. ம. க. வேற்பிள்ளைப்புலவர் அவர்களால் ஈழமண்டல சதகம் இயற்றப்பட்டது. டாகடர் உ. வே. சாமிநாதையர் பத்துப்பாட்டு. சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, பரிபாடல், பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு பெருங்கதைமுதலிய உயரிய சங்க இலக்கியங்களைச் செவ்விதினாய்ந்து ஆராய்ச்சி முகவுரைகளுடனே பதிப்பித்தார்.

இதுகாறும் பலகாலத்துந் தோன்றிய இலக்கியங்களைப் பற்றிக் கூறினும். இனி இலக்கிய நயங்களையிட்டுச் சிறிது கூறுவாம்.

இலக்கியங்கள் பல்லாயிரமாண்டுகளாக மனிதவர்க்கம் கண்ட கனவுகளையும், கொண்ட துயங்களையும், வாழ்ந்த வாழ்க்கை முறைகளையும், அதன் பெறுபேறுகளையும் அறிவிக்கும்; கீர்த்தியைப் பெறுதற்கு முன்னர் ஒருவர் வாழ்க்கையிலடைய வேண்டிய கவலைகளையும் வாழ்க்கைப் போரில் மனிதர் எவ்வளவு துணிவுடன் இருக்கவேண்டுமென்பதையும் அறிவிக்கும். நிற்க,

(தொடர்ச்சி 87-ம் பக்கம் பார்க்க)

தீதெனவும் நன்றெனவுந் தேர்ந்துநான் தேர்ந்தபடி, எதும் நடக்கவொட்டா தென்னே பராபரமே.

எலியின் கதை

அத்தியாயம் 10.

கீர்த்திக்கு வழி

மாரிகாலமும் மெல்ல மெல்லச் சென்றது ஓர் நாள் அந்தக் கிழட்டெலி இவ்வுலகவாழ்வைத் துறந்திருப்பதைக் கண்டேன். நியூ பவுண்லாந்து எலிகள் பிரேதங்களைப் புதைப்பது வழக்கம் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ஈழநாட்டெலிகள் அப்படிச் செய்வதில்லை. ஆகவே கிழட்டெலியின் பிரேதம் அப்படியே கிடந்தது. மறுநாள் ஆரோ ஒருவர் கண்டு அதை அப்புறப்படுத்தி விட்டனர். எலியின் பிரேதத்தைத் தான் மனிதர் மிகவும் வெறுத்தொதுக்குவது. எலிகளிலிருந்து பிளேக்நோய் பரவுவதென்பது மனிதனுடைய அபிப்பிராயம். ஈழநாட்டில் எலித்தோலுக்கு மானமில்லை. ஆனால் பிரான்ஸ் தேசத்தில் எலித்தோலுக்கு நல்ல மானமுண்டு. பண்டைக்காலத்திலே பரத கண்டத்திலே எலிமயிர்ப்போர்வைகள் இருந்ததாகத் தெரிகிறது. இந்த எலிமயிர்ப் போர்வையைப்பற்றி; "ஈழகேசரியில்" சில அன்பர்கள் வாதாடியதுண்டு. எலிகளாகிய எங்களை ஆடுகளாக்கவும் ஒரு சிலர் முயன்றனர். பண்டைய இந்திய மக்கள் கைவன்மையை அறியாதார் கூற்றுக்கு என்செய்வோம். நிற்க,

கிழட்டெலியின் பிரேதத்தை வேலைகாரன் எசமானிடங் கொண்டுபோனான். கிழட்டெலிக்குச் சீவிய காலத்தில் மிகவுந் தொந்தரவைக் கொடுத்த பல், அது இறந்தபின் அதற்கு மிகுந்த கீர்த்தியை உண்டாக்கியது. பொருட்காட்சிச்சாலையிலே, கிழட்டெலியின் வாய் திறந்தபடி வைக்கப்பட்டது. எல்லாரும் கிழட்டெலியின் பல்லைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள்.

கோடைகாலத்தில் ஓர்நாள் கன்னமீசையன் என்னிடம் வந்தது. அது மிக உற்சாகமாகக் காணப்பட்டது. "நண்பனே! அண்மைய தேசங்களை நீயும் நானுமாகப் போய்ப் பார்வையிடவேண்டும் என்ற ஆவல் நெடுநாளாக இருந்ததல்லவா? இப்பொழுது எங்களுக்கு அத்தகையவோர் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. நாளைக்கொரு கப்பல் புறப்படப்போகிறது. முன்னே கப்பலிற் பிரயாணஞ் செய்த எலியொன்று இச்சம்பவத்தை எனக்குச் சொன்னது. இந்தக் கப்பலில் எலிகள் தங்குவதற்கு வசதிகள் பல உண்டு. கப்பற்றளபதியின் சாப்பாட்டு மேசையில் நல்ல உணவுகள் கிடைக்கும். சுருங்கச் சொல்லின் ருஷியாவிலுள்ள சென்பிற்றேஸ்பேக் என்னுமிடத்துக்கு நான் நாளைக்குப் போகப்போகிறேன். நீயும் என்னுடன் வருகிறாயா? என்றது. உடனே நான் மிகுந்த சந்தோஷத்துடன் எனது சம்மதத்தைத் தெரிவித்தேன். நொண்டிக்கும் இடமுண்டோ என்று கேட்டேன். "அங்கே எங்களுக்குப் போதிய இடமுண்டு" என்று நான் முன்பே சொல்லவில்லையா என்றது கன்னமீசையன். உடனே நான் விரைவாகச் சென்று நொண்டிக்கு இதைச் சொன்னேன். எங்களுடன் வரும்படி மன்றாடினேன். ஆனால் நொண்டி மறுத்துவிட்டது. "மறுக்காதே நொண்டியே! நீ கட்டாயம் எம்மோடு வரத்தான் வேண்டும்" என்று நான் வாதாடினேன். நொண்டி தலையையசைத்தது. "என்ன வரமாட்டாயா?" என்றேன். "கடற் பிரயாணத்துக்கு வரமாட்டேன்" என்றது நொண்டி. "நொண்டி என்னுடன் தரைப் பிரயாணம் செய்யப்போகிறது," என்று "சோதிக்கண்ணன்" என்ற எலி சொல்லிற்று. சோதிக்கண்ணன் நொண்டியின் நண்பன். "கடற்கரைக்கு நாங்கள் போகிறோம். அங்கேயுள்ள தானியங்களை நாங்கள் உண்போம். கடலுக்கு அண்மையிலுள்ள இடங்களில் நாங்கள் சந்தோஷமாகத் திரிவோம்" என்று சோதிக்கண்ணன் மீண்டும் கூறிற்று. "அப்படியானால் நானும் உங்களோடு வரத்தான் விரும்புகிறேன். ஆனால் கன்னமீசையனுக்குச் சொன்ன வாக்கை மீறக்கூடாதென்று நினைக்கிறேன்" என்று நான் சொல்லிவிட்டு, நொண்டியிடம் பிரியாவிடை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டேன். எனது பிரிவு நொண்டிக்கு மிக வருத்தத்தை உண்டுபண்ணிவிட்டது. (தொடரும்)

கல்வி அனுபந்தம்

(சொற்ப பிரதிகளே கைவசம் இருக்கின்றன.)

சென்றவருட 'ஈழகேசரி கல்வி அனுபந்த'ப் பிரதிகள் முழுவதும் சேர்த்துப் புத்தக ரூபமாக கட்டப்பெற்றிருக்கின்றது

விலை ரூபா 2-00
தபாற்செலவு 35

'ஈழகேசரி' நிலையம், சுன்னாகம்

பாலர் மலர் — குட்டிக் கதை

கிறிஸ்மஸ் மரம்

[ச. மு.]

தனி அறை ஒன்றினில் கிறிஸ்மஸ் மரம் நின்றது. அறையின் கதவுகள் எல்லாம் பூட்டப்பட்டிருந்தன. அம்மரம் இருப்பது குழந்தைகளுக்குத் தெரியவில்லை. குழந்தைகளின் தாயாருக்கும் கிறிஸ்மஸ் கிழவிக்குமே தெரிந்தது

அவ்வீட்டிலுள்ள வேறு சிலருக்கும் தெரியும். ஒருவரும் இல்லாத சமயத்தில் பூனையனர் ஒருவாறுக நுழைந்துவிட்டார். அதன் குட்டியும் பின்னல் ஓடிச்சென்றது. ஸ்ரீ எலியனரும் செல்வி எலியனரும் பூனையையும் குட்டியையும் கண்டு அங்கும் இங்கும் ஓடிமறைந்தன.

திரு சிலந்தி அவர்கள் எலியனர்களின் சம்பாஷணையைக் கேட்டே பின்னர் தானும் அந்தக் கிறிஸ்மஸ் மரத்தைக் காணவேண்டுமென்று ஆவல் கொண்டார். ஆனல் குழந்தைகளின் தாயார் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திற்காக வீட்டைத் துடைத்துத் துப்புரவு செய்துவிட்டாள். மூலைமுடக்கு எல்லா இடமும் சுத்தமாக இருந்தது. ஆகவே அற்ப சிலந்திகள் இருப்பதற்கு இடமில்லாது தத்தளித்தன. வேறு இருட்டடைந்த இடங்களில் மறைந்து இருந்ததன் காரணமாக மரத்தைக் காணமுடியவில்லை.

உடனே சிலந்தி அவர்கள் கிறிஸ்மஸ் கிழவியிடம் சென்று தனது சனத்தாருக்கேற்பட்ட குறைநிறைகளை முறையிட்டார். கிழவியும் உண்மையில் அதிகம் துக்கப்பட்டாள். சிலநாட்களில் அந்த மரத்தைக் காட்டுவதாக வும் வாக்களித்தாள்

கிறிஸ்மஸ் தினத்திற்கு முதல்நாள் கிழவி சிலந்தி வர்க்கத்தாரிடம் சென்று அவர்கள் விரும்பிய அதே மரத்தை ஆசை தீருமளவுக்கும் பார்க்கச் சொன்னள்.

ஆகவே பாட்டன் சிலந்தி, பாட்டி சிலந்தி, தகப்பன் சிலந்தி, தாய்ச் சிலந்தி, அடுத்தவீட்டுச் சிலந்தி எல்லாச்சிலந்திகளும் அதைப் பார்ப்பதற்குப் புறப்பட்டன.

மரத்தைச் சுற்றிச் சுற்றி ஓடி ஓடிப் பார்த்தன. கொப்பு, தடி, இலை, குளை, விளையாட்டுப்பண்டம், என்று எல்லா இடங்களையும் பார்த்துக்களித்தன. ஈற்றில் தங்கள் இருட்டிடங்களையடைந்தன.

நள்ளிரவில் கிழவி மரத்தை உற்று நோக்கினள். அடியிருந்து நுனிவரைக்கும் சிலந்திவலைகள் குறுக்கும் மறுக்கும் காணப்பட்டன. கிழவிக்குப் பார்த்ததும் கோபம் உண்டானது. அதை ஒருவாறு பொறுத்துக்கொண்டு தன் மந்திர தந்திரத்தால் பொன்மயமாக்கினள். தடி இலை வலை விளையாட்டுப்பண்டம் எல்லாம் பொன்மயமானது.

மறுநாள் கதவுகள் திறபட்டதும் குழந்தைகள் எல்லாம் ஆரவாரத்துடன் மினு மினுக்கும் மரத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தனர்.

இதன் காரணமாகவே இந் நாட்களில் கடை, தெரு, வீதி, வீடு, மேடு சகல இடங்களிலும் ஒருமரத்தை நாட்டிச் சோடித்து வைத்திருக்கின்றனர்.

பொது அறிவு வினக்கள்

இல. (1)

[தமிழ் ஐந்தாந்தர மாணவர்களின் போது அறிவை விருத்தியாக்குதற்கு ஏற்ற முறையில் இவ்வினக்கள் அமைக்கப்படும். மாணவர்கள் தத்தம் ஆசிரியரிடமிருந்தோ பெற்றரிடமிருந்தோ உரிய முறையில் விடைகளை யறிந்து தத்தம் போதறிவை விருத்தியாக்குதல் நன்று]

1. மனித தேகத்தின் சாதாரண உஷ்ண நிலை என்ன ?
2. வானவில்லிலே காணப்படுகிற எழு நிறங்களையும் ஒழுங்காக எழுதுக.
3. யாழ்ப்பாணப் பகுதிக்கு வருடத்தில் எம்மாசத்தில் மழை அதிகம் ?
4. இப்பொழுதிருக்கும் இலங்கைத் தேசாதிபதியின் பெயர் என்ன ?
5. இலங்கைத் தீவில் அச்சடிக்கப்படும் 5 பத்திரிகைகளின் பெயர் எழுதுக.
6. ஒருகலன் எண்ணெயை எத்தனை முழுப் போத்தல்களில் விடலாம் ?
7. 2, 8, 5 என்ற இலக்கங்களால் ஆக்கக்கூடிய எல்லா எண்களையும் எழுதிக் கூட்டுக.
8. வீட்டுக்கு அழைக்கப்படாத விருந்தாளி எது ?
9. இலங்கைக்குள் ஒரு தந்தியடிப்பதற்கு அதிக குறைந்த செலவென்ன ? அச்செலவுடன் எத்தனை சொற்களிலே தந்தியடிக்கலாம் ?
10. இன்றைய, சூரிய உதய அஸ்தமயன நேரங்களை அவதானித்து எழுது.
11. தவிடு நீக்கப்பட்ட அரிசியை ஏன் சமைத்துண்ணல் கூடாது ?
12. ஒரு பாதையில் நீர் எப்பக்கமாக நடந்து செல்ல வேண்டும் ?
13. கோழிமுட்டை குஞ்சுபொரிக்க எத்தனை நாட்கள் செல்லும் ?
14. தேன் கூட்டின் அறைகள் என்ன வடிவமுடையன ?
15. நீர்ச்சிரங்கு எதனல் உண்டாகிறது ?
16. உங்கள் பாடசாலைத் தோட்டத்திலே இம் மாசத்தில் பயிராக்கப்பட்டிருக்கும் செடிகொடிவகைகளில் மூன்றின் பெயர் எழுதுக.
17. இலங்கையில் ஆகாய விமானம் தங்குமிடத்தின் பெயரென்ன?
18. பம்சிரத்ம் இந்த எழுத்துக்களை நிரைப்படுத்தி எழுதினல் ஒரு விசேட தலத்தின் பெயராகும். அது எது ?
19. உமது பகுதியிலுள்ள கிராம சங்கத் தலைவர் பெயரென்ன ?
20. இலங்கைத்தீவிலே அதிகமாக வசிக்கும் 3 சாதியினரின் பெயரை தொகை கூடியதிலிருந்து நிரைப்படுத்தி எழுது.

ஈறுக வல்வினைநான் என்னுமல் இன்பசுகம், பேரும் படிக்கடிமை பெற்றேன் பராபரமே.

உல்லாச யாத்திரை — 6

மீன் காட்சியும் மிருகக் காட்சியும்

“ மூர்த்தி ”

மீன்கள். “சே!” என்று அருவருக்காதீர்கள் இவைகள் அருவருக்கக்கூடிய ஜாதி மீன்களல்ல சந்தேகமிருந்தால் எங்களுடன் வந்த சைவத்திடம் கேட்டுப் பாருங்கள். மீன் என்று சொன்னதும் அருவருப்பவர் ஐயர். ஆனால் அன்று “மௌன்ற் லெவினியா” கடற்கரையில் கண்ணிமைக்காமல் மீன்களைப் பார்த்துக்கொண்டே நின்றாரென்றால் நூதனமல்லவா? எல்லோரும், “நேரமாய்விட்டது; புறப்படுங்கள்” என்று சத்தமிட்டார்கள். கொஞ்சம் பொறுங்கள் இதோ வந்துவிட்டேனென்று கூறிக்கொண்டு ஆத்திரப்பட்டவர் எங்கள் ஐயர். ஐயருக்கு மீன்களில் இவ்வளவு ஆசையென்றால் யார்தான் சிரிக்கமாட்டார்கள். ஆனாலது ஐயரின் பிழையல்ல, மீன்களின் மகிமைதான். ஏன் அவற்றின் பெயர்களைக் கேட்டாலே அவை அருவருக்கக்கூடியனவல்ல என்பது புலப்படும். வெள்ளிமீன், சந்திரமீன், பசுமீன், தங்கமீன், கொடிமீன், புலிச்சுறா, வெண்ணெய்மீன், வெள்ளைவரிமீன், கிளிமீன், ஈட்டிவால்மீன். (இன்னும் அநேகம்— தமிழிற் பெயர் தெரியாததாற் குறிப்பிட முடியவில்லை.)

‘வெள்ளிமீன்’ உண்மையில் நட்சத்திரத்தைப் போன்று ஒளியுள்ளதாகவே காணப்படுகின்றது. வெள்ளியை உருக்கி மீனுருவாக வார்த்ததுபோலவே தோற்றுகின்றது. தங்கமீனும் தங்கத்தைப் போலவே பிரகாசிக்கிறது. இந்தமீன்களின் நீளம் (“1—1½” நீளம்) தங்கம் வெள்ளியென்பன விலையேறப்பெற்ற பொருள்கள் என்பதைப் புலப்படுத்துகின்றன. பசுமீன், புலிச்சுறாமீன் என்றவுடன் பசு, புலி முதலியன தான் ஞாபகத்துக்குவரும். ஆனால் இவையோ 2 அல்லது 2¼ அங்குல நீளமுடைய மிகச் சிறிய சீவராசிகள். கிளிமீன் என்று சொல்வதிலும் அதைப் பஞ்சவர்ணக்கிளிமீன் என்று சொல்வதுதான் பொருத்தமாயிருக்கும். ஐந்து நிறங்களும் பொருந்தியிருப்பதால், இவற்றின் பெயர்களைக் கேட்கிற பொழுதே ஒரு இன்பம் உண்டாகவில்லையா? நேரிற் பார்த்தால் இப்பெயர்கள் எவ்வளவு பொருத்தமாக இடப்பட்டன என்பது விளங்கும். இவற்றின் நிறங்களும் பலவகைப்பட்டன. சிலவற்றில் இந்திர வில்லிற் காணப்படும் அத்தனை நிறங்களும் அழகாக அமைந்திருக்கின்றன. இயற்கையின் விநோத சிருஷ்டிகளில் இச்சின்னஞ் சிறுபிராணிகள் அழகின் உச்ச ஸ்தானத்தை அடைந்திருக்கின்றன. இம் மீன்களைப் புசிக்கவேண்டியதில்லை. இவற்றை ஒருமுறை பார்த்தாலே பசி தீர்ந்துபோம்.

மௌன்ற் லெவினியா கடற்கரை இயற்கை அழகு நிரம்பப் பெற்றது. அழகிய குன்றும் அதன்மேலுள்ள மண்டபங்களும் கண்கவர் வனப்பு வாய்ந்தன. இந்த அழகான இடத்திலேதான் இம் மீன்காட்சிச்சாலை அமைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு பாரிய காட்டிலுள்ள பொருள்கள் யாவற்றையும் ஒரு சிறிய எல்லையில் அடக்கிவிட்டது போலக் காணப்படுகிறது தெகிவலை மிருகக் காட்சிச்சாலை. உண்மையான இலட்சணங்களுடன் கூடிய காட்டுமிருகங்களையும், பட்சிகளையும் இங்கே பார்க்கலாம். நாம் பலவகை மிருகங்களைப்பற்றிப் படித்திருக்கிறோம்; அவற்றின் படங்களைப் பார்த்துமிருக்கிறோம்; வித்தையாட்டிகளாற் கொண்டுவரப்படுஞ் சில மிருகங்களைக் கண்டுமிருக்கிறோம். ஆனால் அவை உண்மையான இலட்சணங்கள் பொருந்தியனவல்ல. கூட்டில் அடைக்கப்பட்டுத் தன்னிஷ்டங் குன்றிப் பலநாள் ஊணின்றியிருக்கும் வலிமையிழந்த மிருகங்களையே நாம் காணக்கூடும். ஆனால் மிருகக்காட்சிச் சாலையில் வளர்க்கப்படும் மிருகங்கள் ஓரளவுக்கு இயற்கைக் காட்சி யளிப்பனவாயிருக்கின்றன.

அவற்றின் வசிப்பிடங்கள் ஏறக்குறைய இயற்கையானவையாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாகக் கரடிகளுக்காக அமைக்கப்பட்டிருக்கும் குகைவீடுகளையும், நீரில் வாழும் பட்சிசாலங்களுக்காக அமைக்கப்பட்டிருக்குஞ் சிறு குட்டைகளையுங் காணலாம். சிங்கம், புலி, குரங்கு முதலியனவும் ஏற்றவாறு போஷிக்கப்படுவதால் வீர சூரத்துடன் காணப்படுகின்றன. கங்காரு தன் முன்கால்களை யுயர்த்திப் பின்னங்கால்களில் எழுந்து நிற்பதும், வயிற்றிலுள்ள பையில் தன் குட்டியை இட்டு வைத்திருப்பதையும் பார்க்க மிக ஆனந்தமாக இருக்கிறது. பலவினப் பாம்புகளும் இங்கு காட்சி யளிக்கின்றன. 20, 25 அடி நீளமான பெரிய மலைப்பாம்புகள் கண்ணாடிப்பெட்டிகளில் அடங்கி ஒடுங்கிக் கிடக்கின்றன. ஔஸ்திரேலியா, ஆபிரிக்கா, அமெரிக்கா முதலிய இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட பலவினக் கிளிகளும், பல வர்ணங்கள் பொருந்திய பட்சிசாலங்களும் மிக இன்பமான காட்சி யளிக்கின்றன. வரிக்குதிரை உடம்பு முழுவதும் அழகிய வரிகளுள்ள சட்டைபோட்டுக்கொண்டிருப்பதுபோலத் தோற்றுகிறது. இங்கு பலசாதிக் குரங்குகள் வளர்க்கப்படுகின்றன. இவற்றிற் சிலவற்றின் செய்கை தம் இனத்திலிருந்துதான் மனிதவர்க்கம் உண்டாகியதென்பதற்குச் சாட்சியாக இருக்கின்றது. எங்கள் கையில் வாழைப்பழத்தைக் கண்டவுடன் ஒரு குரங்கு கரணமடிக்கத் தொடங்கும். வாழைப்பழம் கிடைக்கும்வரையும் அது கரணமடித்துக்கொண்டிருக்கும். பழத்தைக் கொடுத்தபின் எவ்வளவு சொன்னாலும் அது அசையாமல் இருக்கும். மறுபடியும் பழத்தைக் கண்டவுடன் சத்தமிட்டுக்கொண்டு ஓடிவந்து கரணமடிக்கத் தொடங்கும். இன்னொரு குரங்கு தன் பெண்ணுடன் கொஞ்சிக் குலாவி அதை இன்பமாக அணைத்து வைத்திருக்குங் காட்சி வெகு விசித்திரமாக இருக்கிறது.

(தொடரும்)

இலக்கியம்

(83-ம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கியமே சிறந்த் ஓவியச் சாலையாகும். இலக்கியத்தின் கண்உள்ள ஒவ்வோர் கவியும் சிறந்த ஓவியமாகும். ஏனெனில் கவியாகிய படம் ஐம்பொறிகளுக்கும் மனதிற்கும் விடயமாம். பொருள்களையும், அவற்றின் குணம் தொழில்களையும் சித்திரித்துக் காட்டும் வன்மை உடையதாகலினென்க. அங்ஙனம் சித்திரித்துக் காட்டுமென்பதைக் காட்டுதும்.

> " ஓங்குமா ஞெங்கிமலை யோங்கி மணலோங்கிப்
> பூங்குலைகுலாவு குளிர் சோலை புடைவிம்மித்
> தாங்குதிரை யாறுதவழ் சூழலதோர் குன்றின்
> பாங்கருள தாலுறையுள் பஞ்சவடி...... " ஆங்கு :—
> " கன்னியிள வாழைகனி யீவ, கதிர் வாலின்
> செந்நெலுள, தேனெழுகு போதுமுள; தெய்வப்
> பொன்னியென லாயபுன லாறுமுள; போதா
> வன்னமுள; பொன்னிவ ளொடன்பின் விளையாட "

என்று பஞ்சவடியின் சிறப்பையும், நிலைமையையும், கம்பர் சித்திரித்திருப்பது என்றென்றைக்கும் அழியாமலிருக்கக் கூடியதாகத் தோற்றுகிறது. ஓவியகாரராற் சித்திரிக்கப்பட்ட சித்திரங்கள் காலாந்தரத்தில் மங்கி அழிந்தொழிந்து போவதுண்டு. ஆனாற் புலவர்களாற் சித்திரிக்கப்பட்ட கவிகளாகிய சித்திரங்களோ எத்தனை ஆயிரவருடங்கள்சென்றாலும் தம்நிலையிற் சிறிதும்குன்றா.

இப்படிப்பட்ட அழியாத சித்திரங்களை யெல்லாம் பண்டுதொட்டே தமிழுலகிற்கு ஈந்துவந்த புலவர்கள் சென்ற சில நூற்றாண்டுகளாக அருகத் தொடங்கி இவ்விருபதாம் நூற்றாண்டளவில் முற்றாயற்றுப் போயினரெனலாம். மிகவும் பிற்காலத்தில் விளங்கிய சிறந்த கவிச் சித்திரகாரர் வரகவி சுப்பிரமணிய பாரதியாரே. அவரின் பின் தமிழுலகில் கவிகள் தோன்றவில்லை. தமிழன்னையின் எழிலை, தமிழ்நாட்டு வளங்களை பிற்காலத்தும் தொடுத்துச் சித்திரித்து வைக்கும் சித்திரகாரரின்மை எம் முயற்சிக் குறைவினாலேயும் தமிழ் மக்களின் மனத்தில் வேரூன்றிய அடிமையுணர்ச்சியாலேயுமென்க. உத்தியோகங்களின் மோகமும், பரீக்ஷைகளின் போக்கும் பிற்காலத்தில் தமிழ் [illegible]ணவரிடையே தமிழுணர்ச்சியை வேரறச் செய்தனவென்க.

இவ்வாறிருந்தும் மாடமதுரையிற் றோன்றிய நான்காஞ் சங்கம், யாழ்ப்பாணம் ஆரியதிராவிடபாஷாவிருத்திச்சங்கம் போன்றவை சிறிது தமிழுணர்ச்சிக்கு வழிகாட்டிகளாயின. அப்படியிருந்தும் அவைகளை நடத்துவோரும், அபிமானிகளும் கஷ்டமுறுமளவிற்கு அவை நற்பயன் தரா தொழிகின்றன. நியாயம் :—தமிழ் மாணவரிடையே தமிழுணர்ச்சி மோகமற்று உத்தியோக மோகம் தாண்டவம் ஆடுவதே ஆகவே தமிழ்ச்சங்கங்களின் பயனை அநுபவிப்பதற்காகவும், அவற்றிற் குதவி யாகவும் தமிழாசிரிய சங்கங்கள் தொழிற்படவேண்டியிருக்கின்றன.

" செந்தமிழ்த் தெய்வத்தின் எழில் பெறுமிளமை என்றென்றைக்கும் நின்றுநிலவ அத்தெய்வத்தின் திருவடிகளை நாங்கள் மனமொழிமெய்களால் வழிபடுவோமாக. "

கண்ட பாவனையிற் கழுத்தறுத்த கவி

(S. ஆறுமுகம் கொக்கிளாய்)

மகாவலி கங்கையின் மருங்கில் மரமடர்ந்து வளர்ந்திருந்த மாபெருங் காடொன்றில் மரங்கள் சிலவற்றை அரசாட்சியாரிடம் விலை கொடுத்துப் பெற்றான் ஒரு தச்சுவேலை தேர்ந்த தனியன். அவன் வேறு சிலரின் உதவிகொண்டு மரங்களைத் தறித்து அவ்விடத்திலேயே விட்டுவிட்டுச் சென்றுவிட்டான். பின் சில நாட்கள் சென்றதும் அம் மரங்களை அரிந்து விதம்விதமான வேலைகள் செய்வதற்காக வேண்டிய ஆயுதங்களுடன் அவ்விடத்திற்கு வந்தான். மரங்கள் இருந்த இடத்திலிருந்து ஏறக்குறைய அரைமைல் தூரத்திற் கப்பாலுள்ளது அவன் வீடு. ஒவ்வொருநாளும் அவன் காலைப் போசனம் முடித்துக்கொண்டு அம்மரங்கள் இருந்த இடத்திற்கு வந்து வேலை செய்துவிட்டு மத்தியான உணவுக்காக வீட்டுக்குப் போவான். மத்தியானப் போசனம் முடித்துக்கொண்டு மீண்டும் தன் வேலைஸ்தலத்திற்கு வந்து வேலை செய்வான். இப்படியாகவே அவன் பல நாட்களாகத் தொழில் செய்து வந்தான். செய்யவேண்டிய வேலையில் அரைப்பங்கு முடிந்தது.

சில நாட்களின் பின் அவன் மத்தியானப் போசனத்திற்காக வீட்டுக்குப் போய்த் திரும்பிவந்து பார்க்குங்கால் தான் செய்துவிட்ட வேலையிலும் கூடியவேலை அங்கு நடந்திருக்கக் காண்பான். ஆனால் அவ்வேலைகள் அவனுக்கு அதிக தொந்தரவை உண்டாக்கின. யாராவது ஆட்கள் வந்திருக்கிறார்களோ என்று நிலத்தை உற்று நோக்குவான். ஒன்றும் புலப்படாமையால் என்ன செய்வதென்றறியாது ஒருநாள் மேல் நோக்கியபடியே ஆலோசனை செய்தான். அப்பொழுதுதான் அவனுக்கு உண்மை விளங்கிற்று. ஒரு பெரிய மரத்தில் சில குரங்குகள் இருந்து அவன் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தன. அவன் வீட்டுக்குப் போனபின் இறங்கித் தச்சன் செய்ததுபோல் அவனுடைய ஆயுதங்களை எடுத்து வெட்டியும் அறுத்தும் விளையாடிவிட்டு அவன் வருவதற்குமுன் ஓடி ஒழித்துக்கொண்டன. இவற்றையெல்லாம் தச்சன் ஒருநாள் ஒழித்திருந்து பார்த்துவிட்டு மறுநாள் அவைக்கேற்ற பரிகாரம் செய்வதாக உத்தேசித்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றுவிட்டான்.

மறுநாள் வழக்கம்போல மத்தியானம் வீட்டிற்குப் போவதற்கு முன் ஒரு உளியை எடுத்து நன்றாகத் தீட்டிக் கூராக்கித் தன் கழுத்தைச் சுற்றி எழெட்டு முறை விரைவாகக் கழுத்திற் படாமற் சுழற்றினான். குரங்குகள் கவனித்துக்கொண்டே இருந்தன. அவன் வீட்டுக்குப் போனதும் ஒரு குரங்கு இறங்கிவந்து அவன் தீட்டிவைத்த உளியை எடுத்து அவன் செய்ததுபோல் தன் கழுத்திற் படக்கூடியதாக மிக விரைவாக இரண்டு மூன்று முறை சுற்றியது. பாவம்! அங்

நீயேநான் என்று நினைப்பும் மறப்புமறத், தாயே யனையஅருள் தந்தாய் பராபரமே.

கந்தன்

(முற்றொடர்)

4

கமலபதியைப் பிரிந்து சென்ற கந்தன் சில நாட்களாக உண்பதும், உடுப்பதும், உலாவுவதுமாகக் காலத்தைக் கழித்தான். வீடொன்று கட்டுவதற்கு அஸ்திவாரம் போட்டிருந்தான். அவனுடைய ஆடம்பரங்களைக் கண்டு பிறர் நகைத்தனர்.

திடீரென இருந்தாற்போலிருந்து அவனுடைய வீடு கட்டும் வேலை நிறுத்தப்பட்டது. அவனணிந்திருந்த புதுப்புது உடைகளெங்கே? முகத்திலிருந்த அகங்காரம் பொருந்திய பார்வையெங்கே? எல்லாம் பறந்துபோய்விட்டன. சில நாட்களில் உண்ணக்கூட உணவின்றிக் கஷ்டப்பட்டானென்றால் அவனுடைய நிலைமையைச் சொல்லவேண்டியதில்லை. அவன் ஒரு புகையிரத ஸ்தானத்திற்குப் போய், அங்கே வரும் பிரயாணிகளின் சாமான்களைத் தூக்கிச்சென்று கொடுத்து அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு காலத்தைக் கழித்தான்.

ஒருநாள் ஒருவரின் டிரங்குப் பெட்டியைச் சுமப்பதற்காக ஓடினான் கந்தன். அம்மனுஷரின் பக்கத்தில் சென்றதும் திகைத்துப்போய் நின்றுவிட்டான். அங்கே நின்ற கமலபதி, "என்ன கந்தனா?" என்று கேட்டதன்பின்னரே அவனுக்குத் தன்னுடைய நிலைமை தெரிந்தது. "ஆ...ம்..." என்று சொல்லிவிட்டுக் குழந்தைகளைப்போல் தேம்பித் தேம்பி அழத்தொடங்கினான். அவனுடைய நிலையை உணர்ந்த கமலபதி, "அழாதேயப்பா, பெட்டியை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வா" என்று அழைத்துச் சென்றார்.

வீட்டிற்குச் சென்ற கந்தன் தலை குனிந்தவனாய் நின்றுகொண்டிருந்தான். "ஏனடா கந்தா, மெலிந்து போனாயே! இந்த நிலைக்கு ஏன் வந்தாய்?" என்று கேட்டார் கமலபதி. அவனால் ஒன்றும் பேசமுடியவில்லை சும்மா நின்றான்.

கமலபதி: அதெல்லாமிருக்கட்டும், உனக்கு அந்த ஐயாயிரம் ரூபா எங்கிருந்து கிடைத்தது?

கந்தன் கமலபதியைப் பார்த்து விழித்தான்!

கம: என்ன விழிக்கிறாயே, எப்படிக் கிடைத்தது?

கந்: உங்களுக்கு எப்படி ஐயா தெரியும்?

கம: பிறகு சொல்லுகிறேன் விபரமெல்லாம்; நீ உள்ளதை ஒளியாமல் சொல்.

கந்: உங்களுடைய வயலிலேதான் கிடைத்தது எஜமான். ஒருநாள் பலார்பற்றி விடியமுன் வயலுக்குப் போனேன்; யாரோ ஒருவன் வயல் வரம்பில் இருந்துவிட்டு எழுந்து சென்றான். அவனிருந்த இடத்தில் போய்ப் பார்த்தேன்; ஒரு சிறு பெட்டியுடன் அப்பணம் புதைக்கப்பட்டிருந்தது எஜமான்! பணத்தை உங்களிடம் கொண்டுவரலாமென்று நினைத்தேன் என் கெடுகாலம்........ இதற்குமேல் அவனால் பேசமுடியவில்லை. அவனுடைய கண்கள் நீர் சொரிந்தன.

கம: அழாதே கந்தா, பணம் யாரைத்தான் விட்டது! அந்தப் பணத்திற்காக நீ இவ்வளவு கர்வம்கொள்வானேன்? இப்பொழுது அந்தப் பணமெங்கே?

கந்: திருட்டுப்போய்விட்டது எஜமான்!

கம: பார்த்தாயா, பணம் வந்தவழியே போய்விட்டது. நீமட்டும் பணம் கிடைத்ததேயென்று கர்வம் கொள்ளாவிட்டால் இந்நிலை வருமா?

கந்தன் கமலபதியின் காலண்டை வீழ்ந்து, "நான் செய்தது பிழை! பிழை!!" என்று கூறினான்.

கமலபதி அவனைத் தேற்றி, "கந்தா, உன்னுடைய பணம் சேதமடையவில்லை; என்னிடந்தானிருக்கிறது. நான்தான் ஆட்களை ஏவி அவற்றைத் திருடுவித்தேன். இந்தா, நீ பணத்தை எடுத்துக்கொள்" என்று சொல்லி, தான் திருடுவித்த பணம் முழுவதையும் கொணர்ந்து கொடுத்தார். அப்பணத்தைக் கமலபதியே வைத்துக் கொள்ளவேண்டுமென்று அவன் வேண்டினான். அவர் இசையவில்லை.

இப்போது கந்தனிடந்தான் பணம் இருக்கிறது. ஆனால் கர்வம் முதலிய தாழ்ந்த குணங்கள் அவனிடமில்லை. வயலும் தானுமாக உழைக்கிறான்.

நாம் ஒருபோதும் செல்வம் வந்ததென்று செருக்குறலாகா.

"கல்வியுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமும் செல்வ மெனப்படும் — இல்லார்
குறைஇரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் [illegible]றின்"

— நீதிநெறி விளக்கம்.

வ. இராசையா S. S. C. வகுப்பு
முத்துத்தம்பி வித்தியாசாலை, திருநெல்வேலி,

தக், கவியின்பாடு அதோ கதிதான். கழுத்தறுபட்டுக் கொஞ்ச நேரத்திற்குள் மரித்துவிட்டது. மற்றக் குரங்குகள் பயந்து ஓடிவிட்டன. தச்சனும் தன் வேலையை இடரின்றி முடித்தான். "புத்திமான் பெலவானாவான், பெலமுளான் புத்தியற்றால், எத்தனை விதத்தினாலும் இடரது வந்தேதீரும்." நமஸ்காரம்! சுபமஸ்து!!

வெளிவந்துவிட்டது!

வெளிவந்துவிட்டது!!

விசாகப்பெருமாளையரவர்கள்
இயற்றிய

யாப்பிலக்கணம்

(திருத்தமான பதிப்பு)

விலை சதம் 35.

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

கல்வி

(81-ம் பக்கத் தொடர்ச்சி)

தேன் வதைகளைக் கவனித்துப் பாருங்கள். மேலுங் கீழுமாக வீரடுக்குக்களுண்டு. மேலடுக்கறைகள் தேனறைகளாம். கீழடுக்கறைகளில் முட்டைகளும், புழுக்களும், ஈக்களுமுண்டு. அதியுஷ்ணமான காலங்களிலே தேன் கூட்டினுஷ்ணத்தைப் போக்கும்படி ஈக்கள் சேர்ந்து 'சிறகடிக்கும். அது நாமுஷ்ணம் போக்கற்கு விசிறியால் விசுக்குவதுபோலும். கடுங்குளிரைப் போக்கும்படி ஈக்கள் கூண்டில் நெருக்கமாய் மொய்த்துக் கொள்ளும். இது இயற்கையறிவினாலாயபேறென்க.

முட்டை பொரித்துப் புழுப் பிறக்கும். சில காலத்தால் அவை யிறகு முளைத்துப் பறக்கும் பருவத்தையடையும். இராணி யினத்தைச் சேர்ந்த ஈக்கள் முதிரும் பருவம்வரையும் அறையினுள் அடைபட்டிருக்கும். அவற்றுளொன்று பருவமடைந்து வெளியேறினவுடன், அக்கூட்டிலிதுவரையும் தலைவியாயிருந்து அரசு செலுத்தியதும் முட்டையிட்டுக் குல விருத்திசெய்ததுமான ஈ அக்கூட்டின் பரிபாலனத்தைப் பருவமடைந்து வெளிவந்த ஈக்குக் கொடுத்துவிட்டுத் தான் புறம்போந்து வாழத்தொடங்கும். தான் சில ஈக்களைக கூட்டிக்கொண்டு புறப்பட வெத்தனிக்கும் போது புத்திடங் தேடுமீக்கள் வெளியே சென்று வசதியானவோரிடத்தைத் தெரிந்து கொள்ளும்.

இத்தேயத்திலே தேன் எடுப்பவர்கள் தேன் கூட்டை முற்றாயழித்துவிடுவர். தேன்வதைகளையெடுக்கும்போது புகையிட்டு ஈக்களைக் கலைப்பர் அல்லது கொல்லுவர். முட்டையும் புழுவும் நாசமாகும்படி வதைகளைப் பிழிந்து தேனையெடுப்பர்.

இந்தியாவிலே தேனீ வளர்க்குந் தொழில் கையாளப்பட்டுவருகின்றது. தேன் வதைகளையல்லது அடைகளைக் கூர்ந்து கவனித்தவர்கள் அவ்வாறே பல கையாற் செய்து மெழுகு திற்றிக் கூடாக்கித் தேனீ வசிக்கச் சௌகரியமாக்கி விடுகின்றனரென்றும், தாய்த் தேனீயும் மறு தேனீக்களுஞ் சென்று வாழச் செய்கின்றனரென்றும் வாசிக்கிறோம். தேனீக்களை வலைகளிலகப்படுத்தித் தாய்த் தேனீயையும் தேடிப் பிடித்து அவ்வறைகளிற் புகுத்திவிடுவதும் அவை மெழுகு வதையி னுதவியா லங்ஙனஞ் செய்ய விடங்கொள்வதுமே யிதனிரகசியமென்க. தேனீக்குச் சுதந்திரவுணர்ச்சி யியல்பாகவுண்டென்க.

"ஈழகேசரி இளைஞர் சங்கம்"

அன்புள்ள பிள்ளைகளே!

இம்முறை உங்கள் 'தாத்தா' வுக்கு அதிக முயற்சியிருப்பதால் என்னையே எழுதும்படி கேட்டுக் கொண்டார். அதிக காலமாக நானும் ஒன்றேனும் வரையாததால் அவரது வேண்டுகோளுக்கிணங்கினேன். உங்களுக்குச் சந்தோஷந்தானே?

கழிந்த சில நாட்களாக உங்கள் தாத்தாவுக்கு மூச்சுவிடாத வேலை; ஏனெனில் நத்தார் விடுமுறை காலமல்லவா? தனக்கு அறிந்த யாவருக்கும் அவர்களது சமயாசாரத்திற்கேற்ப நற்செய்திகள் அனுப்புவதில் ஈடுபட்டிருக்கிறார். அல்லாமலும் சிறுவர் சிறுமிகளுக்குக் கிறிஸ்மஸ் உபகாரமும் கொடுத்துவருகிறார். நீங்களும் (கிறிஸ்தவர்களாயிருந்தால்) உடனே எழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள். மறந்துவிடவேண்டாம்.

குழந்தைகளே! நாளுக்குநாள் நீங்கள் அனேகமாக எல்லாவற்றிலும் சிறந்து வருகிறீர்களெனச் சொன்னார் உங்கள் தாத்தா. அது எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுத்ததென்று உங்களுக்குத் தெரியுமா? தெரியாது. உங்களது மகிழ்ச்சியே என் மகிழ்ச்சி. துன்பமாயினும் இன்பமாயினும் ஒரு பகுதி எனக்குரியது.

சில சமயங்களில் என் மனசைப் புண்படுத்துகிறீர்கள். நான் உங்களைப் பணம் தரச்சொல்லிக் கேட்கவில்லை. அல்லது எனக்கு அதை அனுப்புங்கள் இதை அனுப்புங்கள் என்று எழுதவில்லை. இல்லையேல் உங்களுக்கு மாறாக ஒன்று நான் செய்ததல்ல. என்ன நியாயத்தைக்கொண்டு நீங்கள் உங்கள் சுக துக்கங்களை அறிவிப்பதில்லையோ நான் அறியேன். நான் வயதுசென்ற ஒரு பெண். பாம.ஏழை. என்னை வருத்தவேண்டாம். "பெற்ற மனம் பித்து பிள்ளைமனம் கல்லு" என்றும் கூறுவார்கள். எல்லாம் காலத்தைப் பொறுத்தது. என் எண்ணப்படி நடப்பீர்களென்பது எனது அபிப்பிராயம்.

இப்பொழுது விடுமுறைகாலம். கண்டபடி வெய்யிலுக்குள் திரியவேண்டாம். உடம்பைப் பேணி நடக்கவேண்டும். சுவர் இருந்தாற்றான் சித்திரம் எழுதலாம். அல்லவா? உங்கள் பெற்றோரது மனம் கோணாமல் நடக்கவேண்டும். தெரியுமா? உங்கள் குணநடைகளைப் பற்றி பெற்றோரிடம் அறிய இருக்கிறேன். ஆனபடியால் கவனமாக நடந்து கொள்ளுங்கள்.

கிறிஸ்மஸ் பண்டிகையின் விசேஷத்தை முன்னிட்டு எல்லோருக்கும் தாத்தா சார்பாக அகமகிழ்ச்சியைத் தெரிவிக்கிறேன்.

சுபம்.

இங்ஙனம்
"பாட்டி"

யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய" த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டி' யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1938-ம௵ டிசம்பர்மீ 25உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது